பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 16 செவ்வாய்க்கிழமை (31-12-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 35

# படையை குவிப்பதில் அரச தரப்பு தீவிரம்!

## லீவில் சென்றோரையும் அழைக்க ஏற்பாடு

கொழும்பு, டிசம்பர் 31

வட பிராந்தியத்தில் படைகளைக் குவிப்பதில் அரசாங்கத் தரப்பில் தீவிரம் காட்டப்படுகிறது. கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் இது சம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அறியப்படுகிறது.

வட பிராந்தியத்தில் பணிபுரிந்து லீவில் சென்றவர்களை உடனடியாகக் கடமைக்குத் திரும்புமாறு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் பணித்திருக்கிறது.

வட பகுதியில் பணிபுரிந்து லீவில் சென்றவர்களை ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் அனுராதபுரத்தில் உள்ள இரண்டாவது படைத் தலைமை அலுவலகத்துக்குச் சமுகமளிக்குமாறு கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் உத்தரவிட்டிருக்கிறது.

கடற்படைப் போக்குவரத்து வசதி கிடைக்காமையாலும், காலநிலை சீரில்லாததாலும் கடமைக்குத் திரும்ப முடியாத சகல படையினரும் அனுராத

(5 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ நடவடிக்கைகள் புதுவருடத்தில் தீவிரமாகும்!

## முப்படைத் தளபதிகள் தகவல்

கொழும்பு, டிச. 31

நாளை பிறக்கும் புதிய வருடத்தில் வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் என்று முப்படைத் தளபதிகளும் தனித்தனியாகத் தகவல் வெளியிட்டிருக்கிறார்கள்.

பிறக்கும் புதிய ஆண்டில் வடக்கு-கிழக்கில் எப்படியும் யுத்தத்துக்கு முடிவு காண்பதே எமது நோக்கம். வடக்கிலோ அல்லது கிழக்கிலோ இனிப் பயங்கரவாதம் தலைதூக்க முடியாத அளவுக்கு 1992இல் அதனை ஒழித்து விடுவோம் — என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்னா கூறினார்.

புதிய வருடத்தில், வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட நவீன ரக விமானங்களின் உதவியுடன் விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்துவோம். — என்று விமானப் படைத் தளபதி எயர்வைஸ் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தனா தெரிவித்தார்.

கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் கிளான்ஸி பெர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### ரஜ்னிஷ் சுவாமியாரின் சிரிப்பு தினம்

புதுடில்லி, டிச. 31

நாளை ஜனவரி 1ஆம் திகதி 'உலக சிரிப்பு தினம்' என்று அமரர் ரஜ்னிஷ் சுவாமியாரின் சிஷ்யர்கள் பிரகடனம் செய்துள்ளனர்.

டிசம்பர் 31 நள்ளிரவு கழிந்தவுடன், அடுத்த பத்து நிமிடங்கள் சிரித்து இத்தினத்தை அனுஷ்டிக்கும்படி ரஜ்னிஷின் தனிச் செயலாளர் மாயோகா நீலம் தெரிவித்திருக்கிறார்.

புனேயில் உள்ள ரஜ்னிஷ் ஆச்சிரமத்தில் உள்ள பத்தாயிரம் பேர் சிரிப்பு தினத்தில் கலந்து கொள்வர்.

(இ-எ)

### முச்சந்தி முரளி



[illegible] பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே......!

## குச்சவெளியில் மோதல் 4 வேங்கைகள் வீரச்சாவு

### 3 படையினர் பலி! ஆயுதங்கள் மீட்பு!!

யாழ்ப்பாணம், டிச. 31

திருகோணமலையில் நேற்று முன்தினம் காலையில் புடவைக்கட்டு இராணுவ முகாமில் இருந்து குச்சவெளி முகாமுக்கு சென்ற படையினர் கல்விமுந்தல் பகுதியில் விடுதலைப் புலிகளைச் சுற்றி வளைக்க முயன்ற சமயம் பெரும் மோதல் இடம்பெற்றது. அரை மணி நேரம் இடம்பெற்ற இந்த மோதலில் மூன்று படையினர் உயிரிழந்தனர். புலிகள் தரப்பில் 4 போராளிகள் களப்பலியானார்கள்.

மோதலையடுத்து ஆயுதப் படையினர் குச்சவெளி முகாமுக்கு தப்பி ஓடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின்போது விடு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மல, சல கழிவு அகற்றும் வேலை; நிதி ஒதுக்கீடு செய்ய இணக்கம்

யாழ். ஆஸ்பத்திரி மல, சல கழிவுகளை அகற்றுவது தொடர்பான வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்கு தேவையான நிதியை 1992 ஆம் ஆண்டிற்குரிய ஒதுக்கீட்டில் வழங்க சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்திருக்கிறது.

சுகாதார அமைச்சுச் செயலாளருடன் யாழ் அரச அதிபர் இது தொடர்பாக பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்ய பெப்ரவரியில் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் அரச சேவைக்கு எழுதுவினைஞர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் நடத்தப்படும்.

கொழும்பில் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், பரீட்சை ஆணையாளருடன் நடத்திய பேச்சுகளையடுத்து இது தொடர்பாக முடிவு செய்யப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [உ-3]

### கடலில் மூழ்கடிக்கப்பட்ட

## படையினரின் படகிலிருந்து இயந்திரம், ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், டிச. 31

நேற்று முன்தினம் யாழ். கடல் நீரேரிப் பகுதியில் கடற்படைப் படகு ஒன்றைத் தாக்கி, மூழ்கடித்த சம்பவத்தின் போது அப்படகிலிருந்த ஆயுதங்களையும் 65 குதிரைச் சக்தி கொண்ட என்ஜின் ஒன்றையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

புலிகள் கைப்பற்றியவை வருமாறு:-

★ ரி 56-2 ரகத் துப்பாக்கிகள் - 2
★ ரி 81 - ரகத் துப்பாக்கி- 1
★ ரி 56 - ரக ரவைக் கூடு- 5
★ ரி 81 - ரக ரவைக் கூடு- 5

(5 ஆம் பக்கம் பார்க்க)

### ★ யாழ். நகரப் பகுதியில்

## சூழல் பேணும் முயற்சி தொடர்ந்து நடைபெறும்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சூழல் சுகாதாரம் பேணும் வேலைகளை எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் தொடர்ந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது.

யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதே சமயம் — கடந்த 23 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நடைபெற்ற சுகாதார வாரத்தின் போது ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் ஆணையாளர் நன்றி தெரிவித்துள்ளார். [உ-3]

## குடாநாட்டில் நாளை முதல் 'மினி' கச்சேரிகள் இயங்கும்

யாழ்ப்பாணம், டிச. 31

யாழ். மாவட்டத்தில் நிர்வாகப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ், நாளை முதல் பிரதேச செயலகங்கள் ('மினிகச்சேரிகள்') அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளன.

குடாநாட்டில் உள்ள 14 உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் அமைக்கப்படும் இந்த மினிக்கச்சேரிகளில் முதலில் நிதி, நிர்வாகம் மற்றும் சம்பளக் கொடுப்பனவு வேலைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-3]

## ஜி.சீ.ஈ.(உ.த) விசேட பரீட்சை விரைவில் நடத்த இணக்கம்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் நடைபெறாமல் போன — 1991 ஆகஸ்ட்டுக்குரிய ஜி. சீ. ஈ [உயர்தர] பரீட்சையை விரைவில் நடத்த பரீட்சை ஆணையாளர் இணக்கம் தெரிவித்திருக்கிறார் என்று அறியவருகிறது.

அதேவேளை—

அண்மையில் நடந்த ஜி. சீ. ஈ. [சாதாரண] தரப் பரீட்சைக்குத் தோற்றிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பரீட்சார்த்திகளின் விடைத்தாள்களை திருத்தும் வேலைகள் ஜனவரி இறுதியில் கொழும்பு, கல்முனை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## இரவல் வாங்கிய பேனாவால் கோர்பி கடைசி கையொப்பம்

வாஷிங்டன், டிச. 31

ஜனாதிபதி என்ற முறையில் தனது கடைசி உத்தரவில் கையெழுத்திடுவதற்கு திரு. மிக்கெய்ல் கோர்பச்சேவ் இரவல் பேனாவையே பாவித்தார் என்று ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

தனது கட்டுப்பாட்டில் இருந்த அணு ஆயுதங்களின் பொறுப்பை ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சினின் அதிகாரத்திற்கு மாற்றுவதற்கான உத்தரவில் கையெழுத்திட தனது பேனாவை திரு. கோர்பச்சேவ் எடுத்தார். அது எழுத மறுத்துவிட்டது.

அந்தச் சமயம் அவருடன் கூட இருந்தவர் அமெரிக்க சி. என். என். டெலிவிஷன் நிறுவனத் தலைவர் திரு. ரொம் ஜோன்ஸன்.

திரு. ஜோன்ஸனின் பேனாவை இரவல் பெற்றே திரு. கோர்பச்சேவ் அந்த உத்தரவில் கையெழுத்திட்டார். (இ-எ)

## தனியார் கல்வி நிறுவனங்கள் வாரத்தில் 3 நாட்கள் இயங்கா

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் எதிர்வரும் வியாழக்கிழமை தொடக்கம் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் இயங்கமாட்டா.

அதேவேளை செவ்வாய், வியாழக்கிழமைகளில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 6-30 மணி வரையுமே வகுப்புக்கள் நடத்தலாம். பாடசாலை நாட்களில் எக்காரணம் கொண்டும் அதிகாலை நேர வகுப்புகள் நடத்தப்படமாட்டா.

நேற்று நடைபெற்ற தனியார் கல்வி நிறுவன ஒன்றியப் பொதுக்கூட்டத்தில் மேற்கண்ட முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. [அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
27—06—1922

மறைவு:
01—12—1991

**அமரர் சிதம்பரப்பிள்ளை கோவிந்தபிள்ளை**

*[இளைப்பாறிய ஆசிரியர், சாவகச்சேரி]*

எங்கள் அன்புத் தெய்வமே! எம்மையெல்லாம் அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ வைத்த தெய்வத்தின் ஆத்மா சாந்தி பெற என்றும் பிரார்த்திக்கின்றோம்.

வீமன்காமம்,
தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.
(19234)

## ஓராண்டு நினைவஞ்சலி



**இராசகோபால் சந்திரன்**
**(நியூ ஈழம் ஜுவலறி மாட் உரிமையாளர்)**

அன்னை மடியில்: **08 - 02 - 1965**
கொடியவர் அழிப்பில்: **31 - 12 - 1990**

மரணத்துள் நீண்டு கிடக்கும்
என் ஆருயிர் நண்பா!

உம்முடைய இழப்பு என்றுமே எம்மால் தாங்க முடியாத ஒன்று. எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றனையே!

சந்திரரே என்று செல்லமாய் அழைத்து வந்த உம்மை சதி, திட்டம் தீட்டி, வழி மறித்து காத்து நின்ற உம் உயிரைப் பறித்தரோ **நய வஞ்சகர்கள்**

தோன்றிற் புகழோடு தோன்றுக, எனும் வழித் தோன்றலே [சந்திரரே] அன்பு, பண்பு, பாசம், அறிவு அத்தனைக்கும் உரியவரே! எங்கே சென்றாயப்பா சொற்ப நாள் கூடி வாழ்ந்து கோடி கால நினைவு தந்தீர் எமக்கு!

வருவீர், வருவீர் என எதிர் பார்த்திருந்தோம். உம்மை பிணமாக ஆக்கி விட்டார்களே! உங்களை மணக்கோலத்தில் பார்க்க இருந்த எங்களை பிணக் கோலம் பார்க்க வைத்து விட்டார்களே!

உம் உதிர்வு அறிந்த அக்கணத்தில் இருந்து, கண்களே குளம் போல் ஆகிவிட்டன, இதயங்களே இயங்க மறுக்கின்றன.

சந்திரரே! சந்திரன் போல் இருக்கும் உம் முகத்தை பூரண நிலவன்று சிதைத்து விட்டார்களே கொடியவர்கள்!

நண்பா! உம் இதழ் உதிர்க்கும் சிரிப்பில் உலகினை மறக்கலாமே. அந்த முத்து சிரிப்பை யாரடா அபகரிக்கச் சென்றார்கள்?

சட்டம் ஏமாந்து போனாலும் போகலாம் - ஆனால் தர்மம் எப்போதும் பழிவாங்கியே தீரும்.

எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு, கண்காண உலகம் சென்றீரோ — மீளாத்துயில் கொண்டு!

உமது ஆத்மா பூரண சாந்தி பெற
பிரார்த்திக்கும்:

**ஆருயிர் நண்பர்கள்.**

40, லோட்டஸ் வீதி,
வண்ணார்பண்ணை.

[19157]

ஓம் சாந்தி!

## வீடியோப் படம் திரையிட கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிச. 31

வருமானம் கருதி வீடியோப் படங்கள் திரையிடப்படுவதைத் தடை செய்தும், வீடியோப் படங்கள் திரையிடுவது தொடர்பாக சில கட்டுப்பாடுகளை விதித்தும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலை, பண்பாட்டுக் கழகம் சில அறிவுறுத்தல்களை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை வெளியிட்டுள்ள அறிக்கை பின்னர் உதயனில் வெளியாகும். [உ]

**யாழ்ப்பாணம்**
**பல்கலைக்கழகம்**

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-01-10 வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

### தற்காலிக- செய்முறைகாட்டுனர்

உடலமைப்பியல்/
உடற்றொழிலியல்/
சமுதாயமருத்துவம்/
மருந்தியல்/
சட்டமருத்துவம்/
நோயியல்/
அறுவைமருத்துவம்/
மருத்துவம்/
குழந்தை மருத்துவம்/
மனநோய்மருத்துவம்.

**சம்பள அளவுத்திட்டம்:**

தற்காலிக செய்முறை காட்டுனர்;

3,250/- ரூபா. மாதமொன்றுக்கு.
[பரீட்சைப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போர் 3,000/- ரூபா மாதாந்தச் சம்பளத்தில் வைக்கப்படுவர்.]

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக்கிளையின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் 23X10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

1991 ஒக்டோபரில் எம். பி. பி. எஸ். இறுதித் தேர்வுக்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் 1983ஆம் ஆண்டுத் தொகுதியைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ மாணவர்கள் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

**- பதிவாளர்.**

யாழ்ப்பாணம்-
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-12-30.

[illegible]

## புது ஆண்டில் பிரவேசிப்போம்

**புதுவருட பிறப்பு ஆராதனை**
**31 - 12 - 1991 இரவு 10-30 மணிக்கு**

விழித்திருந்து ஜெபத்துடன் புது ஆண்டில் சென்று தேவ ஆசீர்வாதத்தைப் பெறுவோம் வாருங்கள்.

போதகர்,
**எபநேசர் ஜெப நிலையம்,**
வட்டுக்கோட்டை.

[19229]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்: **19 — 10 — 1983**



நோயின் பிடியில்: **31 — 12 — 1989**

**சற்குணானந்தன் தினேஷ்**

தொப்புள் அறுக்கையிலே தொடர்பும் அறுந்திருப்பின்
கணப்பொழுதினிலே கலக்கத்தை மறந்திருப்போம்
பாலூட்டித் தாலாட்டிப் பாசத்துடன் வளர்க்கையிலே
ஆண்டுகள் ஏழு மட்டும் எம்முடன் வாழ்ந்துவிட்டு
ஆண்டின் இறுதியிலே ஆண்டவனடி சேர்ந்ததேனோ?

என்றும் உன் நினைவோடு வாழும்;
**அப்பா, அம்மா, தம்பிமார்,**
**மற்றும் உறவினர்கள்.**

156, கோவில் வீதி,
நல்லூர்,

[19179]

## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் மருதப்பு கயிலாசபிள்ளை**

(பழக்கடை இரத்தினம்)

தோற்றம்: **19 — 04 — 1925**
மறைவு: **11 — 01 — 1991**

திதி: 31 — 12 — 1991

''தந்தை மகற் காற்றும் உதவி - அவையில்
முந்தியிருப்பச் செயல்''

கண்ணை இமை காப்பதுபோல் எமைக்காத்து
அரிய கலை ஊட்டி வளர்த்தீர்கள்
மண்ணிலே உங்களைப் போல் தந்தையை
மீண்டும் காணும் நாளினி வருமோ ஐயா.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரன்.**

இல. 2, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

[19205]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தத்துடன் தொடங்கி கேள்விக்குறியுடன் முடிவடையும் 1991!

**1991** ஆம் ஆண்டு, விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்துடன் ஆரம்பமானது.

தற்போது அமைச்சர் தொண்டமானின் சமாதான முயற்சிகள், அதற்கு முன் இராணுவம் பெரும் எடுப்பில் தாக்குதல் ஒன்றை ஆரம்பிக்கலாம் என்ற பீதி என்பனவற்றுடன் இந்த ஆண்டு இன்றுடன் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது.

இவற்றுக்கு இடையில் — அதாவது 1991 ஜனவரிக்கும் டிசம்பருக்கும் இடையில் விடுதலைப் புலிகளும் அரச தரப்பினரும் எத்தனையோ யுத்த முனைகளைச் சந்தித்துவிட்டனர். தமிழீழ வரலாற்றிலேயே நீண்ட போரான ஆனையிறவுப் போரும் இந்த ஆண்டில் தான் நடந்தது. மற்றும் பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கொழும்பு ஹவ்லக் டவுனில் இடம்பெற்ற கார் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்டமை, கொழும்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் மீது இடம்பெற்ற குண்டுத் தாக்குதல், தென் இலங்கை அரசியல் நெருக்கடி, இலங்கை-இந்திய உறவில் ஏற்பட்ட விரிசல்கள் ஆகியவற்றை இந்த ஆண்டில் ஏற்பட்ட மற்றும் குறிப்பிடத்தக்க சம்பவங்களாகக் கருதலாம்.

### தேர்தல் வெற்றியும் ஊகமும்

இந்த ஆண்டில் தென்பகுதியில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் ஐக்கிய தேசியக்கட்சி அமோக வெற்றியை ஈட்டியபோது, இதனை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு மக்கள் அளித்த அங்கீகாரமாகக் கருதி, ஜனாதிபதி பிரேமதாசா துணிச்சலாக செயற்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் ஜனாதிபதி, அரசியல் தீர்வு குறித்து பேச்சளவிலேயே இருந்து வந்தார். போரை நீடிப்பதற்கான கால அவகாசத்தை இராணுவத்துக்கு வழங்கி வந்தார்.

அமைச்சர் தொண்டமானின் சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதியின் ஆசி இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆனால் தொண்டமானின் விஜயம் தைப்பொங்கலுக்குப் பின் ஒத்திவைக்கப்பட்டதும், விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள சிங்களப் பொலீஸாரைப் பார்க்க வர இருந்த அவர்களின் உறவினர்களின் விஜயம் கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்தினால் ஒத்திவைக்கப்பட்டதும், விமானம் மூலம் வடக்கில் தினமும் படைகள் குவிக்கப்படுவதும் இராணுவத் தீர்வையும், அரசியல் தீர்வையும் அரசு ஒரே சமயத்தில் முன்னெடுத்துச் செல்லும் முயற்சியாகவே கருதப்படுகிறது.

### தெரிவுக்குழு

இனப்பிரச்சினைத் தீர்வில் இந்த ஆண்டு அரசினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு, ஒன்றை அமைத்ததும் ஒன்றாகும்.

தெரிவுக் குழுவின் தலைவர் திரு. மங்களமுனசிங்கா கனடா மாநாடு ஒன்றுக்குச் சென்று அங்கு நடைமுறையில் உள்ள ஆட்சி முறை பற்றி அறிந்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும், அரசின் ஒவ்வொரு நடவடிக்கையும் அரசியல் தீர்வுக்கான வேகத்தை குறைத்தே வருகிறது எனலாம்.

★ தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் கடுமையான நடவடிக்கைகள் —

★ சமீபத்தில் தீவுப் பகுதிகளிலும், பூநகரிப் பகுதியில் சங்குப்பிட்டியிலும், பலாலியைச் சூழ உள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் —

★ ஜனாதிபதி பிரேமதாசா இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியதாக லலித் — காமினி அணியினர் தெற்கில் நடத்தி வரும் பிரசாரம் —

இவையே இராணுவ நடவடிக்கையைத் தொடர்வதற்கு தூண்டுகோலாக இருப்பதாக நம்பப்படுகிறது.

தொண்டமானின் யோசனைகளை எதிர்க்கும் தென் இலங்கைப் பேரினவாதிகளும் சில பௌத்த பீடங்களும் இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயற்சிக்கின்றன. வழமை போலவே எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கி உள்ளன.

எனினும் 1957 இல் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா செய்தது போன்று ஜனாதிபதி பிரேமதாசா பௌத்த தீவிரவாதிகளுக்குப் பணிந்து போவாரா என்று கூறமுடியாதுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் உள்வீட்டுச் சச்சரவால் பிளவுபட்டு பலம் இழந்த நிலையில் இருந்து வருகிறது.

## சமாதான முயற்சிகள் ஒருபுறம் நடக்க இராணுவ நடவடிக்கைகள் மறுபுறம்

தென்னிலங்கை மக்களும் போரினால் சலிப்படைந்துள்ளனர். ஆயுதப் படையில் உள்ள உயர் அதிகாரிகளே ஜனாதிபதி சுதந்திரமாகச் செயற்படுவதற்கு பெருமளவில் இடையூறாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### ஆனையிறவு யுத்தம்

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்துக்கும் இடையில் இந்த வருடம் நிகழ்ந்த யுத்தங்களில் மூன்று யுத்தங்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

மார்ச் மாதம் சிலாவத்துறையில் நிகழ்ந்த நான்கு நாள் யுத்தம், ஜூலை — ஆகஸ்ட் மாதங்களில் ஆனையிறவில் நிகழ்ந்த சுமார் ஒன்றரை மாத கால யுத்தம், செப்டம்பர் மாதம் மணலாற்றில் நிகழ்ந்த சுமார் ஒரு மாத கால யுத்தம்.

சிலாவத்துறையில் நிகழ்ந்த யுத்தத்தில் பல முகாம்களில் இருந்து ஒரே சமயத்தில் வெளியேறிய படையினருடனும் விமான, கடற்படையினருடனும் புலிகள் பெரும் யுத்தம் ஒன்றை நடத்தி இருந்தனர்.

ஆனையிறவில் வெட்டவெளியில் நடந்த யுத்தம் மரபு வழிப்படை அந்தஸ்துக்கு விடுதலைப் புலிகளை உயர்த்தி விட்டிருக்கிறது.

மணலாற்றில் படையினர் சுமார் எட்டு மைல் தூரம் முன்னேறியதாகக் கூறப்பட்டாலும் மீண்டும் தமது முகாமுக்குப் பின்வாங்கி இருந்தனர். ஆனையிறவு யுத்த முடிவு புலிகளுக்கு ஒரு தற்காலிக தளர்வாகவே கருதப்படுகிறது. ஆனால் மரபுவழி யுத்தம் ஒன்றை நடத்துவதற்கான பயிற்சிக் களமாக அமைந்ததால் இழப்பினை பொருட்படுத்த வேண்டியதில்லை என்பதே உண்மையான நிலைப்பாடாகும்.

### இந்தியாவுடனான உறவில் நெருக்கடி

சர்வதேச அரங்கில் இந்த ஆண்டு இந்தியாவுடனேயே இலங்கை அடிக்கடி நெருக்கடிகளை எதிர்கொள்ள நேர்ந்தது. பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளாட்ஸ்ரோன் வெளியேற்றம் தொடர்பாக பிரிட்டிஷ் — இலங்கை உறவுகளும் பாதிக்கப்பட்டன. பிரிட்டன் இலங்கைக்கான நிதி உதவிகளையும் நிறுத்தியது.

இலங்கை – இந்திய உறவுகளில் நெருக்கடி ஏற்படுவதற்கு மூன்று சம்பவங்கள் பிரதான காரணமாக இருந்தன.

ஒன்று — இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கையில் இருந்த சமயம், அவர்களுக்கு எதிராகப் போரிட்டு வந்த விடுதலைப் புலிகளுக்கு பிரேமதாசா அரசு, ஆயுத உதவிகளை வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு.

இரண்டாவது — இந்திய வானொலிச் செய்தியாளர் கருப்பாசாமியை இலங்கை அரசு நாடு கடத்திய சம்பவம்.

மூன்றாவது — வொய்ஸ் ஒவ் அமெரிக்காவின் அதி சக்தி வாய்ந்த ஒலிபரப்பு நிலையம் ஒன்றை சிலாபத்தில் உள்ள இரணவில என்ற இடத்தில் நிறுவ அமெரிக்காவுக்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியமை.

1987 ஜூலை ஒப்பந்தம் மூலம் இந்திய அமைதிகாக்கும் படைகளை இலங்கை வருவதற்கு அனுமதித்துவிட்டு, பின்பு இந்தியப்படையினருடன் போரிட்டுக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளை அழைத்து ஜனாதிபதி பிரேமதாசா பேச்சு நடத்தியபோது ஆரம்பமான கசப்புணர்வுகள், மேற்கண்ட சம்பவங்களினால் படிப்படியாக வளர்ந்து 6 ஆவது சார்க் மாநாடு குழம்பும் அளவுக்கு உச்ச நிலையை அடைந்தன.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவை அழைத்து ஒரு நாள் சார்க் மாநாடு ஒன்று நடத்தி முடிக்கப்பட்டுள்ளபோதிலும், பிரேமதாசா அரசு பதவியில் நீடிக்கும் வரை இலங்கை — இந்திய உறவு சீரடைவதற்கு வாய்ப்பில்லை என்றே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

அத்துடன் ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக, இந்திய அரசினால் தற்போது ஆயிரம் பக்க குற்றப் பத்திரிகை தயாரிக்கப்பட்டுள்ளது. ஜனவரி அல்லது பெப்ரவரியில் வழக்கைத் தாக்கல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனின் பெயரையும் அதில் சேர்ப்பதற்கு முயற்சிகள் நடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அப்படி நடந்தால் அரசியல் தீர்வுக்கான முழு அளவிலான பேச்சுக்கள் நடைபெறும்போது இலங்கை — இந்திய உறவில் புதிய நெருக்கடிகள் உருவாகும் சாத்தியம் இருந்து வருவதையும் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.

### தென் இலங்கை அரசியலில்

ஜனாதிபதி பிரேமதாசா மீது கொண்டு வரப்பட்ட அரசியல் குற்றப் பிரேரணை திருமதி பண்டாரநாயக்காவும், அவரது மகனான அனுராவுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் ஆகியவை ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் நெருக்கடிகளைத் தோற்றுவித்தன.

1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் எந்த ஒரு தலைவரும் எதிர்நோக்கி இராத பெரும் அரசியல் நெருக்கடியை, தமக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள அரசியல் குற்றப் பிரேரணை மூலம் ஜனாதிபதி பிரேமதாசா எதிர்நோக்கினார்.

தமக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணையை சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது (இடையில் தீர்ப்பை ''சஸ்பென்ஸில்'' வைத்திருந்து) நிராகரித்ததன் மூலம் திரு. பிரேமதாசா தப்பிக் கொண்ட போதிலும், விடுதலைப் புலிகளுக்கு பிரேமதாசா அரசு ஆயுதஉதவிவழங்கிய குற்றச் சாட்டில் இருந்து முழுஅளவில் விடுபட முடியாத நிலையில் இருக்கிறார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆயுத உதவி வழங்கிய ஜனாதிபதி பிரேமதாசா, இனப் பிரச்சினையில் சிங்கள மக்களுக்கும் ஏற்புடைய ஒரு தீர்வை எப்படி எட்ட முடியும் என்பதே தெற்கில் பேரினவாதத்தைக் கிளப்பும் கோஷ்டிகளின் வாதம் ஆகும்.

### சுதந்திரக் கட்சிக்குள்

1977 தேர்தலில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த நாளில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி இன்னும் அரசியல் ஆதிக்கம் பெற முடியாது இருப்பதற்கு தமது மகன் அனுராவே காரணம் என்று சிறிமாவோ கருதுகிறார்.

தமது மகள் சந்திரிக்கா குமாரணதுங்காவே இதற்குப் பொருத்தமானவர் என்று சிறிமாவோ கருதுகிறார் என்று நம்பப்படுகிறது. சந்திரிக்கா குமாரணதுங்கா சுதந்திரக்கட்சியில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டதன் உள்நோக்கம் இதுதான்.

### மன்னிப்புச் சபை முரண்பாடு

16 ஆண்டு காலத்தின் பின்னர் சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் இலங்கை வருவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்த சிபார்சுகளில் சிலவற்றை ஏற்பதற்கும் இலங்கை அரசு இணங்கி உள்ளது. இலங்கையின் தென் பகுதியிலும், வடக்கு - கிழக்கு மாகாணத்திலும் படையினர் மனித உரிமைகளை மீறுவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தனது ஆண்டு அறிக்கைகளில் குற்றஞ்சாட்டி வந்தது. தற்போது இலங்கை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை ஒரு கண்துடைப்பு என்பதே பெரும்பாலான அரசியல் அவதானிகளின் கருத்து.

### கொக்கட்டிச்சோலை படுகொலை

15 ஆண்டுகளுக்கு முன்னர் வியட்னாமில் நடந்த ''மைலாய்'' படுகொலைகள் சர்வதேச அரங்கில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ஒன்றாகும். அது போன்ற தொன்றே கொக்கட்டிச்சோலைப் பயங்கரம். மூன்று இராணுவத்தினர் கொலையுண்டதற்காக, சுமார் 160 அப்பாவி மக்களைப் படையினர் சுட்டும், வெட்டியும் கொலை செய்தனர்.

இது கிழக்கில் படையினர் இடைவெளிவிடாது செய்து வரும் படுகொலைகளில் ஒன்று எனலாம். கிழக்கில் தமிழ் மக்கள் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்படுவது; பின்னர் காணாமற் போவது, கொலை செய்யப்படுதல், தமிழர்கள் விரட்டப்பட்டுச் சிங்களவர்கள் குடியேற்றப்படுதல், தமிழ்க் கிராமங்கள் நிர்மூலமாக்கப்படுதல் என்பன சிவில் நிர்வாகம் என்ற போர்வைக்குள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன. இதே கொடுமை இப்போது மன்னாருக்கும் பரவி வருவதை அவதானிக்க முடிகிறது.

விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் கடந்த ஒன்றரை வருடங்களாக நடைபெற்று வரும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து, இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சியாக ''குயாக்கர்ஸ்'' சமாதான இயக்கத்தைச் சேர்ந்த குழுவினர் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளனர்.

இலங்கை மெதடிஸ்த மகா சபையின் முன்னாள் தலைவர் வண. பிதா சோமா பெரேரா தலைமையிலான தென் இலங்கைத் தூதுக்குழு ஒன்றும் சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்து திரும்பி உள்ளது.

ஆனால் இந்த முயற்சிகளால் எந்த ஒரு பலனும் ஏற்பட்டதற்கான அறிகுறிகள் இல்லை.

தமிழர் பகுதிகளில் அரசின் பொருளாதாரத் தடை இன்னும் அமுலில் இருக்கத்தான் செய்கிறது.

ஆயிரக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்து தொடர்ந்து அகதி முகாம்களில் சொல்லொணா அல்லலுடன் வாழ்ந்து வருகின்றனர்.

1991 ஆம் ஆண்டு, எந்தவித நற்பயனையும் விளைவிக்காமல் எங்களை விட்டு அகலுகிறது!

— சஞ்சாரன்

---

**ராஜீவ் படுகொலை**

## தேடப்பட்ட மலேசிய வாசி ஒருவர் ஏற்கனவே மரணம்

கோலாலம்பூர், டிச. 31

ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பாக தேடப்பட்டு வரும் 3 மலேசியர்களில் ஒருவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக இந்தியப் பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஸ்ரீபெரும்புதூர் குண்டு வெடிப்பின் போதே அவர் காலமாகி விட்டார் என்றும், எஞ்சிய இருவரில் ஒருவர் கோலாலம்பூரில் இருப்பதாக நம்பப்படுவதாகவும் மலேசிய சர்வதேச பொலீஸ் கிளையான இன்டர் போலைச் சேர்ந்த பொலீஸ் அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக இந்தியப் பிரதிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. அமோத்கான் தலைமையிலான குழுவொன்று கடந்த புதன் கிழமை கோலாலம்பூர் சென்றது தெரிந்ததே. (த)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### விற்பனைக்கு

இரண்டு ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எம். சுஜீவன், 8/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
[19228]

### பழைய புத்தகங்கள்

புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், நியாய விலையில் கொள்முதல் செய்ய நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள யாழ். பழைய புத்தகக் கடை, 32, அருச்சுனா, (ஸ்ரான்லி) வீதி.
[19175]

### கலண்டர் நாட்குறிப்பு

ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர் 1992 இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கக் குறிப்புகளின்படி எல்லா விடயங்களும் அடங்கியது. விலை ரூபா 36/-. ஆனந்தா நாட்குறிப்பு பெரிய அளவில் இரண்டு நாட்களுக்கு ஒரு பக்கம். ரூபா 80/-. இப்பொழுது விற்பனையாகிறது. எங்கும் கிடைக்கும். வெளியீடு: ஆனந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி/1226]

### மாணவர் அகராதி

ஆங்கிலம் படிக்கிறீர்களா? உங்களுக்குத் தேவையான மிகச் சிறந்த ஆங்கில, தமிழ் அகராதி 'வரதரின் மாணவர் அகராதி' ரூபா 95/- மட்டுமே. எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன் துறைச்சாலை, யாழ்ப்பாணம்.
[சி/1225]

### வகுப்புகள்

கணக்கியல், வர்த்தகம், புதியபிரிவு பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பமாகின்றன. இல 108, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். ஆசிரியர் திரு. K. சத்தியதாசன்.
[19200]

### புதிய நாவல்

மீரா வெளியீடு ''ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள்'' திக்கொன்றாய்ப் பறக்கும் சகோதரப் பறவைகளின் சோகராகம், இறுதிப் பக்கத்திலே மானிடச் சித்திரமொன்று மனதுக்குள் சிரிக்கிறது. இதயம் சிலிர்க்கிறது. மானம் உயிர்க்கிறது.
[19227]


## திருமலையில் சுதந்திர வர்த்தக வலயம்

கொழும்பு, டிச. 31

திருகோணமலையில் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருப்பது போன்று, சுதந்திர வர்த்தக வலயம் ஒன்று நிறுவப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. இதன் மூலம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)

## பொருளாதார ஆணைக்குழுவின் முதலாவது கூட்டம்

இந்திய - இலங்கை கூட்டுப் பொருளாதார ஆணைக்குழுவின் முதலாவது கூட்டம் எதிர்வரும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் தலைமையில் ஜனவரி மாதம் நான்காம் திகதி இலங்கைக்குழு புதுடில்லி செல்கிறது.

இந்தியக் குழுவுக்கு அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி தலைமை வகிப்பார் [இ-எ]


## நன்றி நவிலல்

எனது குருத்துவத்தின் 50 ஆண்டுகள் நிறைவு விழாவுக்கும், நத்தார் பெருவிழாவுக்கும், புது ஆண்டிற்கும் எனக்கு நல்வாழ்த்துக்கள் அனுப்பி, எனக்காக மன்றாடிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். அன்னாருக்கு நத்தார், புது ஆண்டிற்குரிய எனது வாழ்த்துக்களைக் கூறி எனது ஆசியுரையையும் அளிக்கின்றேன்.

வ. தியோகுப்பிள்ளை,
யாழ். ஆயர்.

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
(19216)

## விழித்திருப்பு ஆராதனை

31 - 12 - 1991 இரவு 10 · 00 மணிக்கு விழித்திருப்பு ஆராதனை நடைபெறும்.
தேவாசீர்வாதத்துடன் புதுவருடத்தை ஆரம்பிப்போம் வாருங்கள்.

போதகர்,
கல்வாரி தேவாலயம்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

[19230]

# JAFFNA COLLEGE
# INSTITUTE OF TECHNOLOGY
## VADDUKODDAI

**வட்டுக்கோட்டையிலும், யாழ்ப்பாணத்திலும் முழுநேர தொழில் நுட்ப பயிற்சி நெறிகள் 20 - 01 - 1992 இல் ஆரம்பமாகின்றன.**

**வட்டுக்கோட்டையில் நடத்தப்படும் பயிற்சி நெறிகள்:**

### 1. Technician Diploma Course
(ஆங்கில மூலம்)

N. D. T. தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாடநெறிகளும் உள்ளடக்கப்பட்டது.

(i) Civil Engineering

கல்வித் தகைமை:
G. C. E. (O/L) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச்சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: 2 வருடங்கள்

### 2. Diploma Courses
(ஆங்கில மூலம்)

(i) Draughtsmanship (Civil)
(ii) Computer Programming & Data Processing [BASIC, COBOL & d BASE III +] Practical on IBM — PC — AT & MAT 386 Industrial Controller

கல்வித் தகைமை:
G. C. E. (O/L) கணிதத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி

காலம்: ஒரு வருடம்

(iii) Advanced Diploma in Computing [ஆங்கில மூலம்]
Syllabus Includes British Computer Society (B. C. S) part I and Australian Computer Society (A. C. S) Examination.

Qualification:
G. C. E. (O/L) 5 Subjects including Maths, English & G. C. E. (A/L) one Subject.

Duration: One Year

### 3. Engineering Course
(6 Semesters)
Full time. Preparing Students for E. C. E. Part I, (London) Exam & I E S. L. - Part I Exam.

Qualification:
G. C. E. (A/L) Maths With 3 or 4 Passes In two Sittings.

### 4. Tech. Certificate Course
(ஆங்கில மூலம்)

(i) Radio & T. V. Servicing

கல்வித் தகைமை:
G. C. E. (O/L) with Maths & Science

காலம்: ஒரு வருடம்

**யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் பயிற்சி நெறிகள்:**

### 1. Technician Diploma Course
(ஆங்கில மூலம்)

N D T தராதரத்திற்கேற்பவும் City & Guilds (London) பாட நெறிகளும் உள்ளடக்கப்பட்டது.

(i) Civil Engineering

கல்வித்தகைமை:
G. C. E (O/L) கணிதம், விஞ்ஞானம் இரண்டிலும் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: 2 வருடங்கள்

### 2. Diploma Courses
(ஆங்கில மூலம்)

(i) Draughtsmanship (Civil)
(ii) Computer Programming & Data Processing [BASIC, COBOL & d BASE III+] Practical on IBM - PC. AT & MAT 386 Industrial Controller.

கல்வித் தகைமை:
G. C. E. (O/L) கணிதத்தில் திறமைச் சித்தி உட்பட 6 பாடங்களில் சித்தி.

காலம்: ஒரு வருடம்

### 3. Engineering Course
(6 Semesters)

Full time. Preparing Students for E. C. E. part I, (London) Exam & I. E S. L Part I Exam.

Qualification:
G. C. E (A/L) Maths with 3 or 4 passes in two Sittings.

### 5. Craft Certificate Courses
(தமிழ் மூலம்)

(i) இயந்திரசாலைப் பயிற்சி (Machine shop Practice)

காலம்: ஒரு வருடம்

(ii) பொருத்துனர் பயிற்சி (Fitters Practice)
(iii) ஒட்டுனர், கட்டுமானம் பொருத்துனர் பயிற்சி. (Welding; Fabrication and Fitting)

கல்வித் தகைமை:
G. C. E. (O/L) வரை படித்திருத்தல் வேண்டும்.

காலம்: 6 மாதங்கள்

**போதியளவு தகுதிவாய்ந்த மாணவர்கள் விண்ணப்பிக்குமிடத்து மாத்திரம் இப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும்.**

**முக்கிய குறிப்பு:** விண்ணப்பப் படிவம் விலை ரூபா. 10/-

பெற்றுக் கொள்ளக் கூடிய இடங்கள்:
(a) J. C. I. T. அலுவலகம், வட்டுக்கோட்டை.
(b) A C D புத்தகசாலை, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

விண்ணப்பப்படிவங்களை 10-01-1992 காலை 10-00 மணிக்கு முன்னர் J. C. I. T. அலுவலகம், வட்டுக்கோட்டையில் கிடைக்கக் கூடியதாக தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கவும்.

நேர்முகப் பரீட்சை J. C. I. T. அலுவலகம், வட்டுக்கோட்டையில் 13-01-1992 காலை 9.00 மணிக்கு நடைபெறும். சகல விண்ணப்பதாரர்களும் இந் நேர்முகப் பரீட்சைக்கு கல்விச் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

**SELECTION AFTER INTERVIEW**

- பணிப்பாளர்.

(இ-1126)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கழியும் ஆண்டில்

இருபதாம் நூற்றாண்டின், கடைசித் தசாப்தத்தின் முதலாவது வருடம் — 1991 ஆம் ஆண்டு — இன்றுடன் அகன்று செல்கிறது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தளவில், இன்று கழியும் ஆண்டு, வழமை போலவே துன்ப துயரங்களையும், கஷ்ட நஷ்டங்களையும், அழிவுகள் இழப்புகளையும் தந்தது. தமிழ் மக்கள் சொந்தப் பிரதேசங்களில், தமது வீடுகளில் வாழ முடியாது அகதிகளாக அல்லற்பட்டார்கள். பொருளாதாரத் தடையால் பட்டினிச் சாவுகள், போசாக்கின்மை ஆகியன மலிந்தன.

எந்நேரமும் இராணுவத் தாக்குதல் நடக்கலாம் என்ற நிலையில் மக்கள் பதற்றத்துடனேயே வாழ நேரிட்டது. அப்பாவிப் பொதுமக்கள் பலரும் படையினரின் தாக்குதல்களால் உயிரிழக்கவும் நேர்ந்தது. இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் நிலை மேலும் மோசமானதாகும். கிழக்கில் படையினரின் படுகொலைகளும், மனித உரிமை மீறல்களும் தொடர்ந்தன.

தமிழ் மக்கள் தங்களுக்கு நேர்ந்த பல இன்னல்களுக்கும், அவதிகளுக்கும் மத்தியிலும், தமது உரிமைப் போராட்டத்தை பின்னடைய விடவில்லை.

தங்கள் அலுவல்களைத் தாமே நிர்வகிக்கவும், தங்கள் தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கவும், சுயநிர்ணய உரிமையும், தனி அரசு உருவாக்கும் உரிமையும் வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்று உணர வைத்தார்கள்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த மட்டில், தாம் உரிமைகளுக்காகப் போராடினாலும், சமாதானத்தை நாடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் பின் நிற்கவில்லை என்றும், அதன் பொருட்டு யுத்த நிறுத்தம் செய்வதற்கு தயார் என்றும் வருட ஆரம்பத்திலேயே வெளிப்படுத்தி இருந்தார்கள். கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்து அதனை உலகுக்கு ஊர்ஜிதம் செய்தார்கள்.

ஆனால் அரசாங்கத்தின் போக்கும், நடத்தையும் எதிர்ப்பக்கமாகவே இருந்தது. இராணுவத் தீர்வை நாடுவதாகவே அமைந்தது. இராணுவ மேலாதிக்க நிலையை எய்தி தனக்குப் பிடித்தமான ஒரு தீர்வைத் தமிழர் மீது திணிக்கவே அது விரும்பியது. அந்தத் திசை நோக்கிச் செயற்பட்டு முழு வருடத்தையும் கடத்திவிட்டது!

இப்போது வருட இறுதியில் அமைச்சர் தொண்டமானின் புதிய யோசனைகள் தெற்கில் அரசியல் வட்டாரங்களில் பெரும் சர்ச்சையையும், ஆவேசத்தையும் ஏற்படுத்தியுள்ளன.

மொத்தத்தில், இந்த வருடம் தமிழர்களுக்கு எந்த நன்மையையும் பயக்காது தரித்திர ஆண்டாகக் கழிகிறது!

அனைத்துலக மட்டத்தில்— முக்கால் நூற்றாண்டு காலமாக கம்யூனிஸ் பேரரசாக விளங்கிய சோவியத் யூனியனில் கம்யூனிசம் கலைந்தது. அந்த நாடும் உடைந்து சிதறியது. ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் கம்யூனிச வேர் பிடுங்கி எறியப்பட்டது.

எனினும் அமெரிக்காவுக்கும் சோவியத்துக்கும் இடையில் நிலவி வந்த "நிழல்" யுத்தத்துக்கு 91 ஆம் ஆண்டே முற்றுப்புள்ளி வைத்தது.

வருட ஆரம்பத்தில் நடந்த குவைத்-ஈராக் போரின் வெற்றி அமெரிக்காவின் ஆதிக்கத்தனத்துக்கு எடுத்துக் காட்டு.

மொத்தத்தில் 1991 உலக அரங்கிலும் பிரமாதமான விளைவுகளைத் தந்ததாகச் சொல்வதற்கில்லை.

---

# ★ தொண்டமானின் யோசனையால்
# தமிழர்-சிங்களவர் இடையே
# நிரந்தர யுத்தம் ஏற்படும்!

## வண. மடிகே பஞ்ஞசீக மகாநாயக்கர் எச்சரிக்கை

கொழும்பு, டிச. 31

தெற்கில் உள்ள சிங்களவர்களுக்கும் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்களுக்கும் இடையில் நிரந்தர யுத்தம் ஒன்றுக்கான விதையையே தொண்டாவின் யோசனைகள் விதைக்கும்.

பிரபல பௌத்த மதகுரு வண. மடிகே பஞ்ஞசீக மகாநாயக்க தேரர், அமைச்சர் தொண்டமானின் யோசனைகள் குறித்து 'சண்டே ஒப்சேர்வர்' பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவரின் கட்டுரையில் இடம் பெற்றுள்ள சில பகுதிகள் வருமாறு:-

தமது யோசனைகள் தமக்கு சொந்தமானவை என்று அமைச்சர் தொண்டமான் கூறியிருப்பினும், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கோரிக்கைகளை ஒத்தவையாக அவை உள்ளன.

பாரம்பரிய தமிழர் தாயகம், தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் அந்த யோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### தமிழர் தாயகம் கற்பனைத் துணுக்கு

'பாரம்பரிய தமிழர் தாயகம்' என்பது ஜே. ஆர்.- ராஜீவ் ஒப்பந்தத்தின் மூலம் உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஆச்சரியம் தரும் கற்பனைத் துணுக்கு.

அக்கறையுள்ள தரப்பினர் அந்தக் கொள்கையை தம்முடன் வைத்துக் கொள்ளட்டும்.

தொண்டமானின் யோசனைகளில் 'ஈழம்' என்ற வார்த்தை தந்திரோபாயமாக தவிர்க்கப்பட்டிருக்கிறதே ஒழிய, 'ஈழம்' கொள்கைக்கு குறைந்தவையாக அவை இல்லை.

இந்தியாவில் உள்ள தமிழ் நாடு மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அப்பாலும் தொண்டமானின் யோசனைகள் செல்கின்றன.

தெற்கில் உள்ள சிங்கள வருக்கும் வடக்கு - கிழக்கில் உள்ள தமிழருக்கும் இடையே நிரந்தர யுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான விதையையே தொண்டமான் யோசனைகள் விதைக்கும்.

இலங்கையில் பெரும்பான்மைச் சிங்கள இனம் சிறுபான்மை இனமாக குறைக்கப்பட்டு அடக்கப்படும் வரை இந்த யுத்தம் நீடிக்கும். நாடு பிரிக்கப்படுவதிலேயே இது முடிவடையும்.

தமது ஜனாதிபதி பதவியை தியாகம் செய்யும் நிலையிலும் கூட, ஜனாதிபதி இதை அனுமதிக்கப் போகிறாரா?

### புலிகளுடன் பேச உரிமை இல்லை

விடுதலைப்புலிகள் இயக்கம் போன்ற அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கத்திற்கு உரிமை கிடையாது. அடுத்த தேர்தலில் ஏற்படும் விளைவு பற்றி அரசாங்கம் கருத்தில் கொள்ளாது, பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஒன்றைக் காண முயற்சிக்க வேண்டும். யதார்த்த நிலை குறித்து அரசாங்கம் விழித்துக் கொள்ள வேண்டும்.

நாட்டின் ஒற்றுமை, இறைமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றுக்கு ஊறு விளைவிக்கக் கூடியதும் —

பெரும்பான்மை இனத்தை சிறுபான்மையினராக்கக் கூடியதுமான எந்தத் தீர்வும் நிரந்தரமானதாக இருக்க முடியாது.

தொண்டமான் யோசனைகள் கொண்டு வரும் தீர்வு அப்படிப்பட்டதாக இருக்கும்.

இலங்கையின் இறைமை, பிரதேச ஒருமைப்பாடு மற்றும் ஐக்கியம் ஆகியவற்றை முற்றாக விடுதலைப் புலிகளிடம் சரணடையச் செய்வதாக தொண்டமான் யோசனைகள் அமைந்துள்ளன.

### பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம்?

பாதுகாப்பும் பந்தோபஸ்தும் மத்திய அரசிடம் இருக்கும் என்று கூறும் தொண்டமான், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அந்த அந்த மாகாண சபையின் நியாயாதிக்கத்தின் கீழ் இருக்கும் என்றும் கூறியிருக்கிறார்.

திருமலை, காங்கேசன் துறை, தலைமன்னார் மற்றும் பலாலி ஆகியனவற்றை வடக்கு - கிழக்கு மாகாண சபையிடம் ஒப்படைத்த பின்னர், நாட்டின் இறைமை, பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து ஆகியவற்றை மத்திய அரசாங்கம் எப்படி உறுதி செய்யப்போகிறது?

துறைமுகங்களும் விமான நிலையங்களும் தற்சமயம் மத்திய அரசிடம் இருக்கின்றன. அப்படி இருந்தும் கள்ளக் கடத்தல் இடம் பெறுகிறது. அவற்றை வடக்கு - கிழக்கு மாகாண சபையிடம் ஒப்படைப்பது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சட்டபூர்வமாக்குவதுடன் மத்திய அரசின் படைகளால் கட்டுப்படுத்தப்பட முடியாத ஆயுதப்படையினரை கட்டி எழுப்ப விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாகவும் முடியும்.

### தெற்குவரை எல்லைகள்

பலம் பொருந்திய ஆயுத படையைக் கட்டி எழுப்பிய பின்னர், விடுதலைப் புலிகள் ஈழத்தை பிரகடனம் செய்ய மாட்டார்களா? விடுதலைப் புலிகளின் கடந்தகால நடவடிக்கைகளைப் பார்க்கும் போது அவர்களை நம்பமுடியுமா?

ஈழம் பிரகடனத்தைச் செய்த பின்னர் அவர்கள் அமைதியாக இருப்பார்களா? மலை நாட்டைச் சூழ்ந்து கொள்ளும் வரை தமது எல்லைகளை தெற்குவரை அவர்கள் விஸ்தரிக்க மாட்டார்களா? துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுடன் கூடிய நாட்டின் மூன்றில் இரண்டு பங்கை அவர்களிடம் ஒப்படைத்த பின்னர் அரசுப் படைகளால் அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாத நிலை ஏற்படும்.

—இப்படி வண. மடிகே பஞ்ஞசீக மகாநாயக்க தேரர் தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

[இ-எ]

---

# இனப்பிரச்சினை தீரும்வரை முன்னேற்றம் சாத்தியமன்று

## கொழும்பு அதிமேற்றிராணியார் அறிக்கை

கொழும்பு, டிச. 31

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரை எமது பொருளாதாரம் நலிவடைந்தே இருக்கும். நாடு உண்மையான முன்னேற்றம் காணுவது என்பது சாத்தியமானது அல்ல.

கொழும்பு அதிமேற்றிராணியார் மார்க்கஸ் பெர்னாண்டோ விடுத்த நத்தார் தினச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

20 ஆம் நூற்றாண்டின் கடைசி தசாப்தத்தின் முதலாவது வருடம் முடிவடையும் இத்தருணத்தில் - தீர்வு காணப்படாத பல பிரச்சினைகள் உள்ள நாடாகவே இலங்கை விளங்குகிறது.

நீண்ட காலமாக அங்கீகாரமளிக்கப்படாத நிலையில் புதைந்து கிடந்த இனப்பிரச்சினை, 1983இல், பயங்கரமான எரிமலை போன்று வெடித்தது.

உரிய காலத்தில் நியாயமான சலுகைகளுடன் தீர்வு கண்டிருக்கக்கூடிய இனப்பிரச்சினை, கால ஓட்டத்தில் பெரும்பாலும் தீர்க்கப்படவே முடியாத இராட்சத உருவை எடுத்திருக்கிறது.

எமது நாட்டின் மிகப் பெரிய பிரச்சினையாக இனப்பிரச்சினை இன்னும் இருந்தும் வருகிறது.

இனப்பிரச்சினைக்கு நியாய

(6 ஆம் பக்கம் பார்க்க)

---

# 'சாவ்' விளையாட்டுகளில் இந்தியாவுக்கு முதலிடம்!

கொழும்பு, டிசம்பர் 31

''சாவ்'' விளையாட்டுப் போட்டிகளின் பதக்கப் பட்டியலில் இந்தியா முதலாவதாக வந்தது. ஸ்ரீலங்காவுக்கு இரண்டாவது இடம் கிடைத்தது.

நேற்றுடன் முடிவடைந்த ''சாவ்'' போட்டிகளில், நாடுகள் பெற்ற பதக்கங்களின் விவரம் வருமாறு;-

| | | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|---|
| இந்தியா | — | 64 | 59 | 49 |
| ஸ்ரீலங்கா | — | 44 | 33 | 41 |
| பாகிஸ்தான் | — | 28 | 33 | 24 |
| பங்களாதேஷ் | — | 04 | 08 | 29 |
| நேபாளம் | — | 02 | 08 | 09 |
| மாலைதீவு | — | — | 01 | — |
| பூட்டான் | — | — | — | — |

[உ-எ]

---

## ஐ. தே .கவின் எம். பிக்களுக்கு கட்டுப்பாடு

கொழும்பு, டிச. 31

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைச் சிபார்சு செய்ய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு, தனது நடவடிக்கைகளை சுமுகமாக மேற்கொள்வதற்கு வசதியாக, ஐ. தே. கவின் எம். பிக்கள் இது விடயத்தில் தனிப்பட்ட அறிக்கைகளையோ கருத்துக்களையோ வெளியிடக்கூடாது.

இவ்வாறு ஐ. தே. க. செயற்குழு விடுத்துள்ள அறிக்கையில் கேட்கப்பட்டிருக்கிறது. (உ-3)

---

## படையினரின்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ 7.62 ரக நடுத்தர ரவைகள்-248

★ ஜே.ஆர்.ரக கைக்குண்டுகள்- 2

★ 65 குதிரை சக்தியுள்ள என்ஜின்- 1

யாழ்ப்பாணக் கடலில் நாகதேவன்துறையில் இருந்து ஆனையிறவு நோக்கிச் சென்று கொண்டிருந்த கடற்படைப் படகு அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்பதையும் —

அத் தாக்குதலில் கடற்படைப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது என்பதையும் கொழும்பில் படை வட்டாரங்கள் ஒப்புக்கொண்டன.

(உ-எ)

---

## குச்சவெளியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ ரி 56 - 1 ரகத் துப்பாக்கி — 1

★ ரி 56 ரகத் துப்பாக்கி—1

★ அதற்குரிய ரவைக் கூடுகள் — 5

★ ஏ. கே. எல். எம். ஜி. றம் ரவைக் கூடுகள் — 4

★ ஏ. கே. எல். எம். ஜி. லிங்குகள் — 400

★ 7.62 ரக நடுத்தர ரவைகள் — 262

★ 60 மி. மி. மோட்டார் ஷெல் — 2

இந்த தாக்குதலின்போது களப்பலியான போராளிகள் விவரம் வருமாறு;

★ ஷெல்ரன் [கணபதிப் பிள்ளை பால்ராஜ் - திருமலை].

★ கலீல் அல்லது புகழேந்தி [ஜோர்ஜ் நிக்லஸ் - சீனன் குடா].

★ தியாகு [வேலாயுதம் சிவச்சந்திரன் - மூதூர்].

★ அறிவழகன் [இராசரத்தினம் சத்தியமோகன் - புல்மோட்டை]. [உ-3]

---

## இராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னாண்டோ கூறியதாவது :-

தீவிரவாதிகள் ஆயுதங்களையோ அல்லது வேறு கடத்தல் பொருள்களையோ வடக்கு - கிழக்கிற்குள் கொண்டு வர நாம் அனுமதிக்கப் போவதில்லை. புது வருடம் தொடக்கம் இரவு - பகல் கடற் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்படும். புது வருடத்தில் கடற்படைக்குப் புதியவர்கள் சேர்க்கப்படுவர். புதிய உபாயங்களைக் கடைப்பிடித்து நாட்டைக் காப்போம் — என்றார். [அ-த]

---

## படையை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புரம் படை அலுவலகத்தில் சமுகமளிக்க வேண்டும் என்று கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமையன்று யாழ். கடலேரிப் பகுதியில் சென்ற கடற்படை அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் அரசாங்கப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது தெரிந்ததே.

(அ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவு செய்ய பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையில் அங்கத்துவம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பொதுக்கூட்டம் 1992-01-18 இல் நடைபெற இருப்பதால் அங்கத்துவம் பெறாத அனைத்து பதிவு செய்த கூட்டுறவுச் சங்கங்களையும் சபையில் அங்கத்தவராக 1992-01-06க்கு முன்னர் சேர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

[சி/1177] செயலாளர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

### கப்டன் றோய்
### சிற்றம்பலம் மகேந்திரராசா
மயிலிட்டி

தோற்றம்: 16 — 05 — 1966 மறைவு: 31 — 12 — 1990

உள்ளத்தால், உருவத்தால் உயர்ந்திட்ட மறவா-நீ
ஈழத்தின் இதயத்தில் இடங்கொண்டாயடா
மண்ணையும் மணித்தமிழையும் - மலர்
ஈழத்தின் கண்ணெனக் கண்டு - அதைக்
காப்பதற்காய்த் துப்பாக்கி சுமந்து
தப்பாது களம்பல கண்டாய்
இந்தியப் படையின் தந்திர ரோந்தைச்
சிந்தை கலங்கிடச் சிதறடிப்பதற்காய்
அக்கம் பக்கமெல்லாம் அணியணியாய்ப்
படை முகாம் பல விளங்கிட
அதன் நடுவே அக்கினி கக்கி நிற்கும் உன் துப்பாக்கி
அயல் நாட்டுப் படைகளெல்லாம் - அடியோடு
கலைந்து ஆறுதிங்கள் ஆகுமுன்
வடக்கிழத்தின் கடற்பகுதிப் பலாலிப் படைமுகாமை
அடக்கி முற்றுகையிட்டவனே!
ஐப்பசி மாத அக் கொடியநாள்
இப்பூமியில் ஏன் தான் விடிந்ததுவோ?
ஓங்கி உயர்ந்த உன்னுடல்
ஊன்பட்டுப் பூமியில் சாய்ந்து கிடக்கையில்
வான வதனம் அதைக்கண்டு,
வாடி இருண்டு
வாரி வாரி அழுது நனைத்தாள்
உன் வாடி வீழ்ந்த உடலை.

**ஓராண்டாய் உறுதியாய் உறங்கிவிட்ட றோயே! நீ!**

ஈழச் செழும் பயிர்
செழித்து வளர்வதற்காய்
செங்குருதி நீரைச்
செம்மண்ணில் பாய்ச்சிவிட்டு
ஈழத்தாய் மடியிலிருந்து - மெல்லத்
தவழ்ந்து தமிழக மண்ணில் உறங்கினாயே!

— நேசிக்கும் மக்கள்.

[4463]

## புதிய ஆங்கில வகுப்புகள்

● *ESOL* [*London*]
★ செவ்வாய் / வியாழன் 4-30 — 6-00
★ சனி / ஞாயிறு 10-30 — 12-00
★ வியாழன / வெள்ளி 2-30 — 4-00
(ஆரம்பம்: 02 - 01 - 1992)

● *TOEFL*
★ சனி / ஞாயிறு 8-00 — 10-00

● *FOLLOW-ME* [*London*]
*LEVEL* - I
[3 மாதப் பயிற்சி]
★ திங்கள் / புதன் 10-00 — 11-30
ஆரம்பம்: [01 - 01 - 1992]

● *LITERATURE*
★ சனி ஞாயிறு 3-00 — 5-00

விரிவுரைகள்:
**கந்தையா நவரேந்திரன்.**

**JAFFNA ENGLISH ACADEMY**
9, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(இ-1159)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 298/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31 - 12 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 31

மட்டக்களப்பு மாவட்ட தளபதியாக இருந்து கடந்த நவம்பர் 11 ஆம் திகதி வீர மரணம் அடைந்த லெப். கேணல் ஜோயின் 31 ஆம் நாள் நினைவு தினத்தையொட்டிய நினைவுக் கூட்டம் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர்களின் நினைவுரைகளும், கலை, பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (உ-126)

## பனைத் தொழில் பயிற்சி நெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச 31

வடமராட்சி கிழக்கில் பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியத்தினரால் அமைக்கப்பட்டிருக்கும் சிறிபுரம் பனைப் பண்ணையும், பனைத் தொழில் பயிற்சி நெறியும் நாளை புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

யாழ். பல்கலைக் கழகத் துணை வேந்தர் அ. துரைராசா பண்ணையைத் திறந்து வைப்பார். (உ-5)

## தென்மராட்சியில் இன்று 'சந்தனக்காடு'

யாழ்ப்பாணம், டிச. 31

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் தயாரிக்கப்பட்ட திரு. பொன். கணேசமூர்த்தியின் 'சந்தனக்காடு' நாடகம் இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி கலை அரங்கில் நடைபெறும். (த)

## இனப்பிரச்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மான தீர்வு காண கலந்துரையாடல், கருத்து உடன்பாடு, சலுகை வழங்குதல் ஆகியன தான் இன்னும் உதவும்.

இதே வேளை — கடந்த கால தவறுகளில் இருந்து படித்த பாடத்தின் துணை மூலம், மேலும் அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய தவறான வழிகளை கையாளாமல் சம்பந்தப்பட்ட பிரஜைகள் அனைவரும் விழிப்புடன் செயற்பட வேண்டும்.

இப்படி அச்செய்தியில் அவர் தெரிவித்துள்ளார். [இ-எ]

## மரண அறிவித்தல்

### கதிரவேலு வேலுப்பிள்ளை

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரவேலு வேலுப்பிள்ளை நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கதிரவேலு - பொன்னம்மாவின் அன்பு மகனும், அமராவதியின் அன்புக் கணவரும், சிவகரன், சிவகுமார், சிவராசா, சிவச்செல்வன், சிவரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதி, கனகம்மா, சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தையா, காலஞ்சென்ற நமசிவாயம், தேவசகாயம் [பிரான்ஸ்], இராசம்மா [கனடா], காலஞ்சென்ற நாகம்மா, நாகேஸ் [ஜேர்மன்], நல்லையா, சிவகாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
திருமதி ந. கனகம்மா
[illegible]
கண்டி றோட்,
கச்சேரியடி. [19237]

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
### சிவப்பிரகாசம் சிவகுமார் (துரை)
[ இயந்திர பொறியியலாளர் ]

மலர்வு ; 8 - 8 - 56 உதிர்வு : 12 - 12 - 90

'' திருவிளக்கிட்டாரைத் தெய்வம் அறியும் ''

அரிய மனித பண்புகளும், நிறை கல்வியும், நடுநிலைமையும், எவ்விடயத்தையும் திறம்பட கையாளும் ஆளுமையும் கொண்டவராய் எல்லோருக்கும் இனியவராய், இணையற்ற அன்பராய், அண்ணனாய், தம்பியாய், உடன்பிறப்பாய் விளங்கி எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சார்ந்த இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல சித்தி விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

— நண்பர்கள்

மண்டைதீவு (19235)

## கேள்விப்பத்திரம் கோரல்

### இலங்கை மின்சார சபை - வடமாகாணம்

வடமாகாணத்திலுள்ள உப மின் நிலையங்களில் இருந்து மின் மாற்றிகளை கீழ்க்காட்டப்படும் இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கு லொறி / டிராக்டர் உரிமையாளர்களிடமிருந்து காப்பு முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.

(1) யாழ். மாவட்டத்திலுள்ள உப மின் நிலையங்களிலிருந்து - சுன்னாகம் இலங்கை மின்சாரசபை வளவிற்கு.

(2) கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள உப மின் நிலையங்களிலிருந்து கிளிநொச்சி சிறிட் உப மின் நிலையத்திற்கு.

கேள்விப் பத்திரப் படிவமும், மேலதிக விவரங்களும் எனது அலுவலகத்திலும் கிளிநொச்சி மின் பொறியியலாளர் அலுவலகத்திலும் 1992 - 01 - 01ஆம் திகதி காலை 9-00 மணியிலிருந்து 1992 - 01 - 07ஆம் திகதி மாலை 3-00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் பதிவு அஞ்சல் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம், 536/1, காங்கேசன்துறை வீதியிலுள்ள வடபிரதேச பிரதி முகாமையாளர் அலுவலகத்தில் 1992 - 01 - 10 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட திகதி அன்று காலை 10-00 மணிக்கு கேள்விகள் முடிவுற்றவுடன் அவையாவும் திறந்து பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

**வே. கந்தசாமி**
பிரதிப் பொது முகாமையாளர்,
வடபிரதேசம்.

536/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். [சி/1175]

## மரண அறிவித்தல்கள்

### X. அந்தோனிப்பிள்ளை

X. அந்தோனிப்பிள்ளை காலமானார், [ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/நாவந்துறை றோ. க. க. பாடசாலை]. இவர் ஜொய்சியின் அன்புக் கணவரும், சுபோதினி [கனடா], குமுதினி [பல்கலைக் கழகம், கொழும்பு], வினோதினி [மாணவி, திருக்குடும்ப கன்னியர், ஆங்கிலப் பாடசாலை] ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று [31-12-1991] செவ்வாய்க்கிழமை காலை 8-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்;
**மனைவி, மக்கள்.**

5/1, அச்சக வீதி,
யாழ்ப்பாணம். [19231]

### குமாரசாமி சௌந்தராம்பிகை

காரைநகர் வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும் ஒட்டுமடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சௌந்தராம்பிகை காலமாகி விட்டார். இவர் குமாரசாமியின் அன்பு மனைவியும் [உடற்கல்வி ஆசிரியர், தியாகராசா ம. ம. வித்தியாலயம், காரைநகர்], சற்குணராசா [கா. ப. நோ. கூ. சங்கம்], சாரதாதேவி, [வெளிவாரி பட்டப்படிப்பு], தவயோகராசா [மாவீரர் கண்ணன்], தேவராஜா [போராளி இலக்குவன்] ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரியின் அன்பு மாமியும், காலஞ்சென்ற S. K கணபதிப்பிள்ளை [வர்த்தகர், தங்கொட்டுவ]— பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலம் சென்ற சண்முகம் ஆறுமுகம்— அன்னமுத்து ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவர். பூதவுடல் இன்று [31 - 12 - 91] மு. ப. 11.00 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**ஆ. குமாரசாமி**
[கணவன்]

ஒஸ்மானியா லேன்,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம். [19236]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org